# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,072 — 1960 මාර්තු 2 වැනි බදාදා — 2.3.1960**

**12,072 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2 ந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

*உணவு விலைக் கட்டளை இல. எம்என்/3-1960.*

**உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்).**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**நிராகரிக்கும் கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால், 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ந் திகதி வெளிவந்த 12,048 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 21.1.60 ந் திகதியிட்டுப் பிரசுரமான செத்தல் மிளகாயின் விலைகளைக் குறிக்கும், எம்என்/2-1960 இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கி விடுகிறேன்.

1960 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ந் திகதி பி.ப. 3.00 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

---

*உணவு விலைக் கட்டளை இலக்கம் A-67.*

**மீன் கருவாடும் இறுல் கருவாடும்**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை நீக்கம்**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்படும் தத்துவங்களைக்கொண்டு அனுராதபுர மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஜோன் கிளறன்ஸ் லக்ஸ்மன் மெல்டர் குணறற்ன ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதி வெளியான 12,037 ம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 11.1.1960 ம் திகதியைக் கொண்ட மீன் கருவாடும், இறுல் கருவாடும் சம்பந்தப்பட்ட எ 66 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி பி. ப. 3.30 மணிக்கு அனுராதபுரக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. சீ. எல். எம். குணறற்ன,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுரம்.

*உணவு விலைக் கட்டளை இலக்கம் A-68.*

**உப உணவுப் பொருட்கள்—செத்தல் மிளகாய்**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை நீக்கம்**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்படும் தத்துவங்களைக் கொண்டு அனுராதபுர மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஜோன் கிளறன்ஸ் லக்ஸ்மன் மெல்டர் குணறற்ன ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ம் திகதி வெளியான 12,037 ம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 11.1.1960 ம் திகதியைக் கொண்ட செத்தல் மிளகாய் சம்பந்தப்பட்ட எ 64 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி பி. ப. 3.30 மணிக்கு அனுராதபுரக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. சீ. எல். எம். குணறற்ன,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுரம்.

---


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.